# தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சந்திப்பு!



சென்னை ஆழ்வார்பேட்டை இல்லத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் மற்றும் அக்கட்சி சார்பில் வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் லதா, செல்லசாமி உள்ளிட்டோர் சந்தித்தனர்.



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொய்தீன், அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சையது பாரூக், ஷாஜகான், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அபுபக்கர் மற்றும் நிர்வாகிகளும் சந்தித்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் நாகை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், நாடாளுமன்ற உறுப்பினர் சுதீஷ் மற்றும் விஜய் பிரபாகரன் ஆகியோர் சந்தித்தனர். இச்சந்திப்பின்போது, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் புதுச்சேரியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் செந்தில், விக்னேஷ் கண்ணன், கார்த்திகேயன், செந்தில் குமார், ஏ.எம்.எச்.நாஜீம் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது, புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர்.



தி.மு. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் மனிதநேய ஜனநாயக கட்சி சார்பில் சிதம்பரம் தொகுதியில் வெற்றி பெற்ற அக்கட்சியின் தலைவர் தமிமுன் அன்சாரி நேரில் சந்தித்தார். வெற்றி பெற்ற சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்.



தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, அவரது இல்லத்தில் கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரன், பொள்ளாச்சி தொகுதியில் வெற்றிபெற்ற அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் நித்யானந்தம் ஆகியோர் சந்தித்தனர்.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

## தி.மு.க. தலைமையிலான கூட்டணியில்தான் என்றும் தொடர்வோம்!

### பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் பேட்டி!

சென்னை, மே 8 –

அண்மையில் நடந்துமுடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இடம்பெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக், வாணியம்பாடி, பாபநாசம் ஆகிய இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றது. வாணியம்பாடி தொகுதியில் எஸ்.எஸ்.பி.சையத் பாரூக், பாபநாசம் தொகுதியில் ஏ.எம்.ஷாஜஹான் ஆகியோர் வெற்றிபெற்றார்கள்.

இதையடுத்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை, சென்னைதேனாம்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன், மாநில பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர், மாநில பொருளாளர் எம்.எஸ்.ஏ.ஷாஜஹான், மாநில முதன்மை துணைத் தலைவர் எம்.அப்துர் ரஹ்மான், மாநில துணைத் தலைவர் கே.நவாஸ் கனி எம்.பி., வாணியம்பாடி தொகுதி எம்.எல்.ஏ. எஸ்.எஸ்.பி.சையத் பாரூக், பாபநாசம் தொகுதி எம்.எல்.ஏ., ஏ.எம்.ஷாஜஹான் மற்றும் இ.யூ.முஸ்லிம் லீகின் மூத்த நிர்வாகிகள் ஆகியோர் சந்தித்தனர்.

அப்போது புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் தங்களது சான்றிதழ்களை தி.மு.க. தலைவர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். அப்போது நூறு சதவீதம் வெற்றி பெற்ற இ.யூ.முஸ்லிம் லீகிற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் விளக்கம் அளித்தார். அதன் விவரம் வருமாறு:

**கேள்வி :** நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று போட்டியிட்ட உங்கள் இ.யூ.முஸ்லிம் லீகிற்கு இரண்டு இடங்கள் கிடைத்து இருக்கின்றன. கேரளாவில் முஸ்லிம் லீக் உள்ளடக்கிய காங்கிரஸ் கூட்டணி அரசு அமைய உள்ள நிலையில், கேரளாவைப் போல தமிழ்நாட்டிலும் தற்போது கூட்டணி அரசு அமையும் என்ற சூழலில், பாரம்பரியமிக்க தேசிய கட்சியாக உள்ள தங்களது நிலைப்பாடு எப்படி இருக்கும்?

**பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்:** இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கிறது. கேரள மாநிலத்தில் காங்கிரஸ் கூட்டணியில் இருக்கிறது. கேரளாவில் 22 தொகுதிகளில் நாங்கள் வெற்றி பெற்றிருக்கிறோம். இதுவரை அங்கிருந்த கம்யூனிஸ்ட் அரசு மாறி, இப்பொழுது காங்கிரஸ் கூட்டணி அரசு வரவுள்ள நிலையில், எங்களது இந்திய யூனியன் முஸ்லிம் லீகைச் சேர்ந்த நான்கைந்து உறுப்பினர்கள் அமைச்சர்கள் ஆகும் வாய்ப்பு உள்ளது. இது கேரளாவில் உள்ள வழக்கமான நிலையாகும்.

அதேநேரத்தில் தமிழ்நாட்டில், நடைபெற்ற முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் யாருக்கும் பெரும்பான்மையைத் தராத நிலையில், கூட்டணி அரசு அமையும் என்ற சூழல் உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு நாட்களாக எங்களிடத்தில் பலரும் பல்வேறு கருத்துகளை முன்வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் அனைவரிடமும் நாங்கள் உறுதியாக சொன்னது ஒன்றே ஒன்றுதான். நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் பாரம்பரியமாக இருந்து வருகிறோம். அன்றும் இருந்தோம், இன்றும் இருக்கிறோம், இனியும் இருப்போம், என்றும் தொடர்வோம் என்று நாங்கள் அவர்கள் அனைவரிடமும் மிகத் தெளிவாகக் கூறிவிட்டோம்.



ஆகையால் இங்கே எங்களது நிலைப்பாட்டில் எந்த குழப்பமும் இல்லை. ஊடகங்களிலும் அங்கு இங்குமாக பலரும் பலவற்றை பேசுவார்கள் தான். அவற்றால் விளையும் குழப்பங்கள் ஒருபோதும் எங்களை பாதிக்கப் போவதில்லை.

எங்களைப் பொறுத்த வரை, ஜனநாயக அடிப்படையில் தேர்தல் களத்தில் கூட்டணி அமைத்து நின்றோம். வெற்றியும் பெற்றோம். மக்கள் எந்த அடிப்படையில் எங்களுக்கு இந்த முடிவைத் தந்தார்களோ அந்த அடிப்படையிலேயே நாங்கள் தொடர்கிறோம். இவ்வாறாக நாங்கள் எடுத்திருக்கும் முடிவு நல்ல முடிவாகவே இருக்கும். அதன் மூலம் நமது தமிழ்நாடு மாநிலத்தில் நல்லதே நடக்கட்டும்.

**கேள்வி :** தி.மு.க. தலைவரை, இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் வெற்றி பெற்ற இரண்டு வேட்பாளர்களுடன் இணைந்து, அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினீர்களே? அது குறித்து விளக்கிக் கூற முடியுமா?

**பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்:** நிச்சயமாக! தமிழ்நாட்டில் உள்ள மாநில மக்கள் மட்டுமின்றி, இந்தியாவில் உள்ள அனைத்து மாநில மக்களும் வியந்து போற்றும் வகையில் கடந்த ஐந்தாண்டுகளாக வெற்றிகரமான மக்களாட்சியை திராவிட மாடல் அரசு என்ற அடைமொழியுடன் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியிருக்கிறார் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

இன்னும் ஒருபடி மேலே சொல்வதானால், வெளிநாடுகளில் உள்ளவர்களும் இந்த ஆட்சியைப் பாராட்டி, வாழ்த்து தெரிவித்து, இந்த ஆட்சியுடைய திட்டங்களை முன்மாதிரியாக கொண்டு தாங்களும் செயல்படுத்த போவதாக கனடா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து தெரிவிக்கப்பட்டதாக ஊடகங்கள் வழியே அறிகிறோம்.

இப்படிப்பட்ட நல்லாட்சியைக் கொடுத்த திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, இந்தத் தேர்தலிலே அமோக வெற்றி பெற்று, மீண்டும் இந்த நல்லாட்சி தொடர வேண்டும் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால் அது நிகழவில்லை என்பது எங்களுக்கு மிகப்பெரிய வருத்தத்தை அளித்துள்ளது. அந்த வருத்தத்தை ஸ்டாலின் அவர்களுடன் பகிர்ந்து கொண்டோம்.

தேர்தல் வரும், போகும். வெற்றி தோல்விகள் வரும் போகும். எத்தனையோ தேர்தல்களைச் சந்தித்து வெற்றிகளையும், தோல்விகளையும் மாறி மாறிக் கண்டிருக்கிறோம். வெற்றியில் மமதை கொள்வதுமில்லை. தோல்வியில் துவண்டு போவதுமில்லை. இதுதான் எங்கள் வழமை. தி.மு.க. தலைவர் ஸ்டாலின் அவர்கள் உடனான சந்திப்பிலும் இதையே உணர்ந்தோம்.

நாடாளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் செயல்பாடுகள் இன்னும் வீரியம் காணும். மக்கள் பிரச்சனைகளை முன் எப்போதையும் விட அழுத்தமாக முன் வைப்போம், வெற்றி பெறுவோம்.

**கேள்வி :** நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத்திற்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்நிலையில், ஆட்சி அமைப்பதற்காக உங்களது ஆதரவைக் கோரினார்களா?

**பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்:** நேரடியாக எங்களிடத்தில் சம்பந்தப்பட்டோர் யாரும் வந்து கேட்டதாக எனக்குத் தகவல் இல்லை. அவர்கள் மூலமாகப் பல பேர் எங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நேற்றுக் காலையில் கூடக் கேட்டார்கள், தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் சொன்ன பதில், இந்திய யூனியன் முஸ்லிம் லீகைப் பொறுத்த வரை திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் காலத்தில் இருந்தது போலவே தளபதி ஸ்டாலின் அவர்களுடைய காலத்திலும் தொடர்ந்து நீடிக்கிறோம், இனியும் தொடர்ந்து நீடிப்போம்.

இதை நான் உறுதியாகச் சொல்வதற்குக் காரணம், எங்களது கூட்டணி என்பது தேர்தல் ஒன்றை மட்டும் முன் வைத்து செய்யப்பட்ட கூட்டணி அல்ல. மாறாக இது கொள்கைக் கூட்டணி. கொள்கை ரீதியான உடன்பாடு எங்களுக்குள் உள்ளது என்பதால், இந்த உடன்பாட்டுக்கு எல்லையோ, கால வரையறையோ கிடையாது. எனவே இந்த கூட்டணியில் நேற்றும் இருந்தோம், இன்றும் இருக்கிறோம், இனியும் தொடர்வோம்.

**கேள்வி :** தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகித்த காங்கிரஸ் இப்பொழுது தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக செய்திகள் வருகின்றனவே? இதுகுறித்து உங்களது கருத்து என்ன?

**பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன்:** திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் நிறைய கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு முடிவுகள் இருக்கலாம். அதில் எங்களுக்கு எந்த தொடர்பும் கிடையாது. எங்களைப் பொறுத்தவரை தி.மு.க.வுடன் நாங்கள் கொண்டுள்ள கூட்டணி கொள்கை கூட்டணி என்பதால் தேர்தல் முடிந்து விட்டது. உங்களை விட்டும் விடை பெறுகிறோம் என்று சொல்லக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை.

பேரறிஞர் அண்ணா காலம் தொடங்கி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது காலம் தொடர்ந்து, இப்பொழுது தளபதி ஸ்டாலின் அவர்களது காலத்திலும் சரி, இனியும் சரி இந்தப் பாரம்பரியம் தொடரும். நாங்கள் இந்தக் கூட்டணியில் தொடர்ந்து இருப்போம்.

இவ்வாறு இ.யூ.முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பேட்டி அளித்தார்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலை. மாணவர் சேர்க்கை!

### ஜூன் 8ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்!

கோவை, மே 8 -

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இளங்கலை அறிவியல் மற்றும் வேளாண் தொழில்நுட்ப படிப்புகளுக்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மை பிரிவுக்கும் ஒரே இணைய தள விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. HTTP://TNAU.UCANAPPLY.COM என்ற ஒருமித்த இணையதள விண்ணப்பத்தின் மூலம் வரும் ஜூன் 8ம் தேதி வரை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

மாணவர் சேர்க்கைக்கான வழிமுறைகள், கலந்தாய்வுக்குரிய தேதி மற்றும் செயல்முறைகள் அனைத்தும் உடனுக்குடன் இணையத்தில் வெளியிடப்படும். இளமறிவியல் வேளாண்மை, தோட்டக்கலை படிப்புகளுக்கு தமிழ் வழியிலும் விண்ணப்பிக்கலாம். வனவியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து உணவு முறை, பட்டு வளர்ப்பு, வேளாண் வணிக மேலாண்மை ஆகிய இளமறிவியல் பாடங்களும், வேளாண்மை தொழில்நுட்பக் கல்வி பாடப்பிரிவுகளான வேளாண் பொறியியல், உணவு தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், உயிரித் தகவலியல் மற்றும் வேளாண்மை தகவல் தொழில்நுட்பம் ஆகிய 14 இளமறிவியல் பட்டப் படிப்புகளுக்கு ஒரேயொரு இணைய வழி விண்ணப்பம் மட்டும் போதுமானது.

**சேர்க்கை எண்ணிக்கை:** வரும் கல்வியாண்டில் உறுப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான எண்ணிக்கை 2,516 ஆகவும், இணைப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 4,736 ஆகவும் இருக்கும்.

இதில் அரசாங்க இட ஒதுக்கீடு 3,051 மற்றும் மேலாண்மை இடஒதுக்கீடு 1,685 ஆகும். சிறந்த விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், மாற்றுத்திறனாளிகள், அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவீதம், தொழில்முறை கல்வி பாடப்பிரிவு, மூன்றாம் பாலினத்தவர் மற்றும் அயலக வாழ் தமிழர்கள் என சிறப்பு ஒதுக்கீட்டுக்கான சேர்க்கை நடைபெறும்.

விண்ணப்பக் கட்டணம் பொதுப்பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ.600, ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.300 ஆகும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற செல்போன் எண்களிலும், UGADMISSIONS@TNAU.IN என்ற மின்னஞ்சல் மூலமாகவும், வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு அறியலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளமறிவியல் வேளாண்மை, வேளாண்மை சுயசார்பு மற்றும் தோட்டக்கலை பிரிவில் 340 இடங்கள் உள்ளன.

இந்த பாடங்களுக்கான விவரங்களை 9865703537, 9442029913 என்ற செல்போன் எண்களிலும், AGRIDEAN2015@GMAIL.COM மூலமாகவும் தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.